Translation

பொது சுற்றறிக்கை கடித இல. 02-107/2013

எனது இல. TCS/T/12/2013

சுகாதார அமைச்சு

"சுவசிரிபாய"

385 வண.பத்தேகம விமலவன்ஷ தேரோ மாவத்தை

கொழும்பு-10

2013.06. 19

மாகாண சுகாதார சேவைகள் செயலாளர்கள்

மாகாண பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்

போதனா வைத்தியசாலைகளின் பணிப்பாளர்கள்

விஷேட இயக்கங்களின் தலைவர்கள்

மாகாண வைத்தியசாலைகள் மாவட்ட பொது வைத்தியசாலைகள்

ஆதார வைத்தியசாலைகளின் வைத்திய அத்தியட்சகர்கள் அனைவருக்கும்

## நிர்வாக தர மருத்துவ அலுவலர்களுக்கு வெளிநாடு செல்வதன் பொருட்டு அவர்கள் சேமித்த லீவினை வழங்குதல் - 2014

2014ஆம் ஆண்டு காலப்பகுதியில் தாம் சேமித்த லீவினை வெளிநாட்டில் செலவழிப்பதற்கு விரும்பும் தகைமையுடைய நிர்வாக தர மருத்துவ அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த விண்ணப்பங்கள் இச்சுற்றறிக்கையில் தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைய தரப்பட்டுள்ள வழமையான நடைமுறைகளினூடாக 2013 ஓகஸ்ட் 01 ஆம் திகதி அன்று அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரியை அடையக்கூடிய வகையில் அனுப்பிவைக்கப்பட வேண்டும். பணிப்பாளர் (TCS) சுகாதார அமைச்சு "சுவசிரிபாய" இல.385 வண.பத்தேகம விமலவன்ஷ தேரோ மாவத்தை கொழும்பு-10.

"பொது 126" படிவம் (வெளிநாட்டு லீவுக்கான விண்ணப்பம்) சம்பந்தப்பட்ட அலுவலரால் சரியாகப் பூர்த்தி செய்யப்பட்டு விண்ணப்பத்துடன் வழமையான நடைமுறைகளினூடாக அனுப்பப்பட வேண்டும் என்பதையும் கவனத்திற் கொள்தல் வேண்டும்.

02. அலுவலரால் ஏற்கனவே எடுக்கப்பட்ட வெளிநாட்டுக்கான லீவுகள் பற்றிய சகல விபரங்களும் (குறிப்பாக விடுமுறை லீவு முழுச் சம்பளத்துடனான லீவு உடந்தைப் பரிசில் லீவு போன்றவை) விண்ணப்பதில் குறிப்பிட வேண்டும்.

03. இந்த லீவு குறித்த வருடத்தில் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதால் தெரிவு செய்யப்பட்ட அலுவலர்கள் 2014 ஜுன் 30 ஆம் திகதிக்கு முன்பு நாட்டிலிருந்து புறப்படுதல் வேண்டும்.

04. சேமித்த லீவினைப் பயன்படுத்துவதற்காக தெரிவு செய்யப்படுபவர்கள் தெரிவு செய்யப்பட்டோரின் பட்டியல் வெளியிடப்பட்டு 03மாதங்களுக்குள் அவர்/அவள் குறித்த லீவினை வெளிநாட்டில் பயன்படுத்துவதற்கு உடன் பட்டுள்ளாரா என்பது பற்றி சுகாதார அமைச்சிற்கு அறிவித்தல் வேண்டும். குறித்த காலப்பகுதியினுள் ஏற்றுக் கொண்டமை பற்றி அறிவிப்பதற்கு தவறும் அலுவலரின் விடயத்தில் சுகாதார அமைச்சு பட்டியலிலுள்ள அடுத்த அலுவலருக்கு அந்த சந்தர்ப்பத்தை வழங்கும். 2014 ஜுன் 30ஆம் திகதிக்கு முன்பு குறித்த அலுவலர் நாட்டிலிருந்து புறப்படாவிட்டால் அவர் / அவள் வெளிநாடு செல்வதற்கு அனுமதிக்கப்பட்ட சேமித்த லீவினை இழக்க வேண்டி நேரிடும். அத்துடன் அடுத்துவரும் 02 வருடங்களுக்கு இந்த லீவினை பெறுவது தொடர்பில் அவர்கள் கவனத்தில் கொள்ளப்பட மாட்டார்கள்.

05. 55 வயதுக்கு மேற்பட்டவர்களும் சேமித்த லீவினை இவ்வாறு பெறுவதற்கு கவனத்தில் கொள்ளப்படுவர் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

06. உமது நிறுவனத்தில் பணியாற்றும் சம்பந்தப்பட்ட சகல அலுவலர்களுக்கும் இச்சுற்றறிக்கை கடிதத்தின் விபரங்களை தெரியப்படுத்துமாறு நீர் வேண்டப்படுகிறீர்.

டாக்டர்.லக்ஷ்மி.சி.சோமதுங்க

பிரதி பணிப்பாளர் நாயகம் (வைத்திய சேவைகள்

# வெளிநாடு செல்வதற்கு சேமித்த லீவினைப் பெறுவதற்கான மாதிரி விண்ணப்பப் படிவம் - 2014

01. அலுவலரின் பெயர் :-.........................................

02. பிறந்த திகதி :-.........................................

03. பதவிப் பெயர். :-.........................................

04. தற்போது பணியாற்றும் நிலையம் :-.........................................

05. தற்போதைய தரத்துக்கு நியமிக்கப்பட்ட திகதி :-.........................................

06. விஷேஷத்துவம் ஏதேனும் இருப்பின் அதற்கு

நிய்மிக்கப்பட்ட திகதி :-.........................................

07. திகதிகள் காலப்பகுதி நோக்கம் என்பவற்றுடன்

வெளிநாட்டில் பயன்படுத்தப்பட்ட லீவு பற்றிய விபரம் :-.........................................

08. அ) தற்போது வெளிநாடு செல்வதற்கு

உத்தேசித்துள்ள திகதியும் விண்ணப்பிக்கும்

லீவுக்கான காலப்பகுதியும் :-.........................................

ஆ) லீவில் செல்வதற்கான நோக்கம் :-.........................................

09. தொலைபேசி இல :-.........................................

10. ஏதாவது விஷேட கோரிக்கைகள் :-.........................................

திகதி :- ..................................

..........................................
(விண்ணப்பதாரியின் ஒப்பம்)

நிறுவனத் தலைவரின் பரிந்துரை :-

திகதி :- ..................................

..........................................
(நிறுவனத் தலைவரின ஒப்பம்)

பன்முகப்படுத்தப்பட்ட பிரிவுத் தலைவரின் பரிந்துரை :-

நிறுவனத் தலைவரின் பரிந்துரை :-

திகதி :- ..................................

..........................................
(பன்முகப் பிரிவுத் தலைவரின ஒப்பம்)